**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 6–ம் நாள்

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18–ம் நாள் புதன்கிழமை

******

**அசல் வழக்கு எண். 83/2021–ல் இடைமனு எண்.06/2026**

சிந்தாமணி ...மனுதாரர்/பிரதிவாதி

...எதிர்....

சுமதி ...எதிர்மனுதார்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 11.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுவில் சொல்லியுள்ள முக்கிய ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொண்டு உத்தரவிட வேண்டி, மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச கட்டளை 8 விதி 1A(3)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மனுதாரர்/பிரதிவாதி



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.18 18:12:37 +0530

மீது வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கினை தாக்கல் செய்து, தற்போது பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ளதாகவும்,

(1.2) சில முக்கிய ஆவணங்களை தாக்கல் செய்ய தற்போது ஆலோசனை கிடைத்ததன் பேரில், தாக்கல் செய்வதாகவும், மனுதாரரர் வேண்டுமென்றோ அல்லது அலட்சியத்தாலோ அவற்றை முன்பே தாக்கல் செய்யாமலிருக்கவில்லை என்றும், மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர் தரப்பு ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

(2.1) மேற்படி வழக்கில் மனுதாரர்/எதிர்வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் போலியானவை என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் கிடையாது என்றும், வழக்குக்காக போலியாக தாக்கல் செய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றுள்ளார் என்றும்,

(2.2) மேற்படி ஆவணங்களை பொருத்து இம்மனு முற்றிலும் ஜோடிக்கப்பட்டவை என்றும், எனவே, மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?**

5<u>. தீர்வு:</u>

(5.1) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.18 18:12:42 +0530

செய்யப்பட்டது. அசல் வழக்கானது வாதி, பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, தற்போது பிரதிவாதி தரப்பு சாட்சிய விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

(5.2) இந்நிலையில், மனுதாரர்/பிரதிவாதியால் மனுவில் சொல்லியுள்ள முக்கிய ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொண்டு உத்தரவிட வேண்டி, மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.3) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர்/எதிர்வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் போலியானவை என்றும், மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் கிடையாது என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

(5.4) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வரிசை எண். 1 முதல் 9 வரையிலான ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், மேற்படி ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு தொடர்புடைய ஆவணங்கள் என்பதால், அவற்றை ஏற்றுக்கொள்ளலாம். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் இரு தரப்பினர்களுக்கும் வழக்கை நடத்துவதற்கு வாய்ப்பு அளித்து அதன் பின்னர் வழக்கில் தீர்வு காண்பதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றும், மனுவின் தன்மையை கருதி இம்மனுவில் இருதரப்பினரும் அவரவர் செலவுத்தொகையை அவர்வர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.18 18:12:47 +0530

தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.18 18:12:54 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> | - இல்லை - |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.18 18:12:59 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண்.83/2021ல்
இடைமனு எண்.06/2026
நாள் 18.02.2026.